DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 7/2021

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மாணிக்கம் | Father's/Husband's Name : | மாணிக்கம் |
| Village | : சுந்தரராஜபுரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா சொத்தின் சர்வே எண்.112/4, 112/5. விஸ்தீரணம் 99 ஏர்ஸ். வாதி எந்த சர்வே நம்பரில் எவ்வளவு விஸ்தீரண நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் தாவா சொத்து அவர்களுடையது என்றும் அதில் நான் இடைஞ்சல் செய்யக்கூடாது என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண்.112/5 ல் கட்டுப்பட்டநிலம் ஆதீயில் மாணிக்கம் என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மாணிக்கத்திற்கு மாணிக்கம், வேலாண்டி, பரமன் என்று 3 பேர் ஆண் வாரிசுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வேலாண்டி மகன் தான் தங்கவேல் என்றால் சரிதான். தங்கவேலு உடன் சின்னவேலாண்டி, மாணிக்கம் என்று இரண்டு சகோரர்கள் இருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2) எனது அப்பா மாணிக்கத்திற்கு நானும் எனது சகோதரர் கருப்பையாவும் ஆண் வாரிசுகள். எனது தாத்தா மாணிக்கத்துடன் பிறந்தவர்கள் தான் வேலாண்டி மற்றும் பரமன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி 3 நபர்களும் தாவா சொத்து மற்றும் பிற சொத்துக்களை தங்களுக்குள் 3 ல் 1 பாகமாக பிரித்து கொண்டார்கள் என்றால் இல்லை. மேற்கண்டவாறு தாவா சொத்தை பாகம் பிரித்து கொண்டதில் ஆளுக்கு 43 செண்ட் நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தான 43 செண்ட் நிலத்தை வாதி தங்கவேலு தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. தாவா சொத்தை அளவீடு செய்ய காவலர்களுடன் வருவாய் துறையினர் வந்தார்கள் என்றால் வருவாய் துறையிலிருந்து வந்தார்கள், வாதி அளக்கவிடவில்லை, காவலர்கள் யாரும் வரவில்லை. மேற்படி தாவா சொத்தை

அளவீடு செய்ய வந்தபோது வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்ததால் தான் அவர் ஆட்சேபணை செய்தார் என்றாலும் அதனால் தான் சொத்து அளவீடு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

3) நான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்திருந்தால் காவல் துறையினர் உதவியுடன் அளவீடு செய்திருப்பார்கள் என்றாலும் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்ததால் தான் அளவீடு செய்யவில்லை என்றாலும் சரியல்ல, நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன். தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருக்கிறது என்றால் என் பெயரில் தான் இருக்கிறது. வருவாய் ஆவணங்கள் என் பெயரில் இருப்பதை பயன்படுத்திக் கொண்டு வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றும் என்னுடைய அனுபவத்தில் இருக்கிறதுஎன்றும் இந்த வழக்கில் பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு எதுவும் இடைஞ்சல் செய்தாரா என்றால் ஆரம்பத்திலிருந்து அவர் தான் இடைஞ்சல் செய்து வருகிறார். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று வாதி எனக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்றும் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இந்த நீதிமன்றத்தில் இல்லை, தேனி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன்.

4) அந்த வழக்கு இன்னும் நிலுவையில் தான் இருக்கிறது. மேற்படி வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்து அதுவும் எனது வருகையின்மை காரணமாக கடந்த 07.01.2026ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னார்கள். பட்டா என் பெயரில் இருப்பதை வைத்து கொண்டு தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இருப்பதாக எடுத்து கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய வந்தார்களாஎன்றால் இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்து அதன் பௌதீக அமைப்புகளை குறித்து அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் அளக்கவில்லை. வருவாய் ஆவணங்களை மட்டும் வைத்து கொண்டு வாதி தாவா சொத்தில் இல்லை என்றும் நான் அனுபவத்தில் இருப்பதாகவும் எதிர்வாதம் பொய்யாக செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 05.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.03.05 13:26:26 +0530

District Munsif,

Aundipatti.